1972 ஆகஸ்ட் 19]

அந்த வகுப்புகளில் நேரம் வீணாகாமலிருக்க மேற்பார்வையிடுகிற பொறுப்பும் சில சமயங்களில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: நாங்கள் எல்லாம் படிக்கிறபோது 'டிரில் கிளாஸ்' இருந்ததே, அது தான் இது.

Somanathapuram T.B. Hospital

* 85. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a T.B. Specialist has not been appointed in the Somanathapuram T.B. Hospital, Ramanathapuram district; and

(*b*) if so, the reasons therefor?

சோமநாதபுரம் காசநோய் மருத்துவமனை.

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுர மாவட்ட சோமநாதபுரம் காசநோய் மருத்துவமனையில் காசநோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) காச நோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் கிடைக்காமையால் 20–9–1969 முதல் 24–3–1972 வரை அத்தகுதி பெற்ற மருத்துவர் நியமிக்கப்படவில்லை. 25–3–1972 முதல் காச நோய் மருத்துவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர் இம்மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார்.

திரு. பி. திருஞானசம்பந்தம்: தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் காசநோய் மருத்துவமனை சோமநாதபுரம் ஒன்றில்தான் இருக்கிறது. அது பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. அதை விரிவுபடுத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை விரிவுபடுத்துகின்ற எந்த ஒரு திட்டமும் இப்பொழுது பரிசிலனையில் இல்லை. காசநோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் பல்வேறு அமைப்புகளின் மூலமாக இயங்கிக் கொண்டு வருகிறது. காசநோய் தடுப்பு எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் கவனிக்கப்பட்டு வருகின்ற காரணத்தால், இந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு உணர்கிறது.

Leprosy

* 86. *Q.*—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that alarming incidence of leprosy is prevalent among students in Secondary Schools in North Arcot district; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this matter?

தொழுநோய்.

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள இடைநிலைப் பள்ளி மாணவர்களிடையே தொழு நோய் அஞ்சத்தக்க அளவில் அதிகமாகக் காணப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் பொதுவாக 1.6 சதவீதம் பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்கள் தொழுநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) கிராமப்புறங்களில் பள்ளி சென்றாலும் செல்லா விட்டாலும் தொழுநோயால் பீடிக்கப்பட்ட சிறுவர்களுக்கு